
# கிருஷ்ணதீபம்

(வாழ்வை நெறிப்படுத்தும்
குறள் மொழித் தொகுப்பு)



நுணாவில் கிழக்கு, கல்வயல் வீதி, சாவகச்சேரி
அமரர் இரத்தினம் கிருஷ்ணகாந்தா அவர்களின்
சிவபதப்பேறு குறித்த
நினைவு வெளியீடு
28.02.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



K.Murugathasan
(Retired Teacher)
B.A.(Hons) Tamil
P.G.D.E.
M.Phil.Tamil

நுணாவில் கிழக்கு கல்வயல் வீதி

சாவகச்சேரியைப் பிறப்பிடமாக கொண்ட

# அமரர் இரத்தினம் கிருஷ்ணகாந்தா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு வெளியீடு

**28.02.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

கருவினில் உதித்துப் - புவி
மடிதனில் வளர்ந்து
இளநடை பயின்று
குறுநகை புரிந்து - எம்
இதயங்கள் நிறைந்து
இன்று
இறைவனை நினைந்து
அவனடி அணுகி
அமரனாய் அணைந்த - எம்
அன்புச் செல்வனுக்கு
இது
சமர்ப்பணம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருவு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மாறிநின்றென் னைமயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
யூறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
யுள்ளவாகாண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறைசிவனே
ஈறிலாப் பதங்கள்யாவையுங்கடந்த
இன்பமே யென்னுடையன்பே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென்கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங்கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கல்லாலின் படையமர்ந்து நான்மறையா
றங்குமுதற் கற்ற வேள்வி
வல்லார்கணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக் கப்பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
இருந்த படி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து
பவத் தொடக்கை வெல்லாம்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதற் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
நற்கருமங்களை செய்வதற்கு ஆசை கொள்ள வேண்டும்.
2. ஆறுவது சினம்.
தணிய வேண்டுவது கோபமேயாகும்.
3. இயல்வது கரவேல்.
நம்மால் முடிந்ததை ஒளியாமல் செய்ய வேண்டும்.
4. ஈவது விலக்கேல்.
பிறருக்குக் கொடுப்பதைத் தடுத்தல் ஆகாது.
5. உடையது விளம்பேல்.
நம் திறமைகளை வெளியே சொல்லக் கூடாது.
6. ஊக்கமது கைவிடேல்.
ஒரு காரியம் செய்யும்போது தடை ஏற்படுமானால் அது கண்டு உற்சாகம் குன்றி விடல் ஆகாது.
7. எண் எழுத்து இகழேல்.
கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்குதல் ஆகாது.
8. ஏற்பது இகழ்ச்சி.
பிறரிடம் யாசிப்பது இழிவு தருவதாகும்.
9. ஐயம் இட்டு உண்.
பிச்சையிட்டுப் பின்னர் உண்ணுதல் வேண்டும்.
10. ஒப்புரவு ஒழுகு.
உலகத்தின் போக்கு எப்படியென்று அறிந்து; அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.
11. ஓதுவது ஒழியேல்.
எக்காரணத்தை முன்னிட்டும் படிப்பதை விட்டு விடலாகாது.
12. ஔவியம் பேசேல்.
பொறாமை வார்த்தைகளைப் பேசுவது கூடாது.
13. அஃகஞ் சுருக்கேல்.
அளவைக் குறைத்துத் தானிய வியாபாரம் செய்தலாகாது.
14. கண்டு ஒன்று சொல்லேல்.
கண்ணால் கண்டதற்கு மாறாக எதுவும் கூறாதே. கண்டபடியே சொல்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. 'ங' ப் போல் வளை.

'ங' எனும் எழுத்தைப் போன்று அனைவரையும் அணைத் துச் செல்ல வேண்டும்.

16. சனி நீராடு.

சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த் து தலை முழுக வேண்டும்.

17. ஞயம்பட உரை.

கேட்பவர்களுக்கு இன்பம் உண்டாகும் விதமாகப் பேசு, அதாவது இனிமையாகப் பேச வேண்டும்.

18. இடம்பட வீடு எடேல்.

அளவுக்கு மேல் இடம் வீணில் கிடக்க வீடு கட்டுதல் கூடாது.

19. இணக்கம் அறிந்து இணங்கு.

ஒருவர் நல்ல குணமுடையவர் தானா என்பதை அறிந்து அதன்பின் அவருடன் நட்புக் கொள்ள வேண்டும்.

20. தந்தை தாய்ப் பேண்.

தாய் தந்தையரை அன்புடன் ஆதரித் துப் பாதுகாக்க வேண்டும்.

21. நன்றி மறவேல்.

ஒருவர் செய்த நன்மையை ஒருபோதும் மறந்துவிடலாகாது.

22. பருவத்தே பயிர் செய்.

உரிய காலம் அறிந்து பயிர் செய்ய வேண்டும்.

23. மண் பறித்து உண்ணேல்.

பிறர் நிலத்தை அபகரித்து சீவனம் பண்ணாதே.

24. இயல்பலாதன செய்யேல்.

தருமத்துக்கு மாறுபட்ட காரியங்களை நீ செய்தல் கூடாது.

25. அரவம் ஆட்டேல்.

பாம்புடன் விளையாடுதல் கூடாது.

26. இலவம் பஞ்சில் துயில்.

இலவம் பஞ்சினால் செய்த மெத்தையிலே நீ நித்திரை கொள்.

27. வஞ்சகம் பேசேல்.

கபடமாக வார்த்தை பேசுதலாகாது.

28. அழகு அலாதன செய்யேல்.

துன்பம் வந்த காலத்தும் இழிசெயல் புரிதல் கூடாது.

29. இளமையில் கல்.

இளமையிலேயே நீ கற்றுக் கொள்ள படிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. அரனை மறவேல்.
கடவுளை மறக்க கூடாது.
31. அனந்தல் ஆடேல்.
கடலில் நீந்தி விளையாடக் கூடாது.
32. கடிவது மற.
கோபம் உண்டாக்கும் வார்த்தைகளை மறந்து விட வேண்டும்.
33. காப்பது விரதம்.
பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் காப்பதே நோன்பு.
34. கிழமைப் படவாழ்.
உடலும் பொருளும் பிறர்க்கே உரிமைப்படும்படி வாழ வேண்டும்.
35. கீழ்மை அகற்று.
இழிவான செயல்களை நீக்க வேண்டும்.
36. குணமது கைவிடேல்.
நல்ல குணங்களை விட்டுவிடலாகாது.
37. கூடிப் பிரியேல்.
நல்லவருடன் சினேகம் செய்து, பிறகு, அவரை விட்டு நீங்குதல் கூடாது.
38. கெடுப்பது ஒழி.
பிறருக்கு கெடுதல் செய்வதை விட்டுவிட வேண்டும்.
39. கேள்வி முயல்.
கற்றவர் கூறுவனவற்றைக் கேட்பதற்கு நீ முயற்சி செய்.
40. கைவினை கரவேல்.
உனக்குத் தெரிந்த கைத்தொழிலைப் பிறருக்கு ஒழிக்காதே.
41. கொள்ளை விரும்பேல்.
பிறர் பொருளைக் கொள்ளையிட ஒருபோதும் விரும்புதலாகாது.
42. கோதாட்டு ஒழி.
குற்றமுள்ள விளையாடல்களில் ஈடுபடலாகாது.
43. சக்கர நெறி நில்.
அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நடக்க வேண்டும்.
44. சான்றோர் இனத்து இரு.
அறிஞர்கள் நிறைந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுவாயாக.
45. சித்திரம் பேசேல்.
பொய்யை மெய்போல் சித்தரித்துப் பேசுதலாகாது.
46. சீர்மை மறவேல்.
புகழுக்குக் காரணமானவைகளை மறந்து நடத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. சுளிக்கச் சொல்லேல்.
கேட்பவர் முகம் சுளிக்கும்படி நீ பேசுதல் கூடாது.

48. சூது விரும்பேல்.
சூதாடுதலை ஒருபோதும் நீ விரும்பலாகாது.

49. செய்வன திருந்தச் செய்.
செய்யும் காரியங்களைத் திருத்தமாகச் செய்ய வேண்டும்.

50. சேரிடம் அறிந்து சேர்.
நன்மையடையத் தகும் இடத்தைத் தெரிந்து அங்கு சேர்.

51. சையெனத் திரியேல்.
பலரும் சீ என்று வெறுக்கும்படி துட்டனாய்த் திரியலாகாது.

52. சொல் சோர்வு படேல்.
மற்றவருடன் பேசும்போது உற்சாகம் குன்றிச் சோர்வுடன் பேசுதலாகாது.

53. சோம்பித் திரியேல்.
முயற்சி செய்யாது சோம்பல் கொண்டு வீணாக திரியாதே.

54. தக்கோன் எனத் திரி.
தகுதியுடைவன் என்று எல்லோரும் புகழும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.

55. தானமது விரும்பு.
தானம் செய்ய விருப்பம் கொள்ள வேண்டும்.

56. திருமாலுக்கு அடிமை செய்.
திருமாலுக்குத் தொண்டு செய்வாயாக.

57. தீவினை அகற்று.
பாவச் செயல்களை நீக்கிவிடல் நன்று.

58. துன்பத்திற்கு இடம் கொடேல்.
முயற்சியினால், வரும் துன்பத்துக்கு இடம் கொடுக்காது மீண்டும் முயல்வாயாக.

59. தூக்கி வினை செய்.
நன்றாக யோசித்து அதன்பிறகே ஒரு காரியத்தை செய்ய வேண்டும்.

60. தெய்வம் இகழேல்.
கடவுளை இகழக்கூடாது.

61. தேசத்தோடு ஒட்டி வாழ்.
தேசத்த மக்களுடன் ஒத்து வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. தையல் சொல் கேளேல்.
மனைவியின் இழிந்த சொற் கேட்டு நடக்காதே.

63. தொன்மை மறவேல்.
பழமையை மறந்து விடலாகாது.

64. தோற்பன தொடரேல்.
தோல்வி தரும் செயல்களில் மீண்டும் ஈடுபடலாகாது.

65. நன்மை கடைப்பிடி.
நல்ல காரியம் செய்தலையே, உறுதியுடன் கடைப்பிடிக்க வேண்டும்.

66. நாடு ஒப்பன செய்.
நாட்டிலே உள்ளவர் பலரும் ஒத்துக்கொள்ளக் கூடிய நல்ல காரியங்களையே செய்ய வேண்டும்.

67. நிலையில் பிரியேல்.
இருக்கும் உயர்நிலையிலிருந்து கீழ்நிலைக்கு இறங்கி விடலாகாது.

68. நீர் விளையாடேல்.
வெள்ளத்தில் நீந்தி விளையாடல் கூடாது.

69. நுண்மை நுகரேல்.
நோய் தரும் உணவுகளை உட்கொள்ளக் கூடாது.

70. நூல் பல கல்.
அறிவை வளர்க்கும் நூல் பலவற்றையும் விடாது கற்பாயாக.

71. நெற்பயிர் விளைவு செய்.
நெல்லுப் பயிரை சாகுபடி செய்ய வேண்டும்.

72. நேர்பட ஒழுகு.
நேர்மையாக நடந்து கொள்

73. நைவினை நணுகேல்.
ஒருவரைக் கெடுக்கும் செயல்கள் பக்கம் ஒரு போதும் செல்லாதே.

74. நொய்ய உரையேல்.
பயன் அற்ற வார்த்தைகளைப் பேசுதலாகாது

75. நோய்க்கு இடம் கொடேல்.
வியாதி உண்டாக இடம் கொடுக்கக் கூடாது.

76. பழிப்பன பகரேல்.
பிறர் பழிக்கும் இழி சொற்களைக் கூறுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. பாம்பொடு பழகேல்.
பாம்புடனே பழகுதல் கூடாது.

78. பிழைபடச் சொல்லேல்.
குற்றம் தோன்றப் பேசுதல் கூடாது.

79. பீடு பெற நில்.
பெருமை பெறத்தக்க வழியிலே நிற்க வேண்டும்.

80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்.
உலகம் புகழும் பெரியவர்களைப் போற்றி அதன்படி வாழ்.

81. பூமி திருத்தி உண்.
பூமியைச் சீர்திருத்திப் பயிர் செய்து உண்ணவேண்டும்.

82. பெரியாரைத் துணைக் கொள்.
பெரியவர்களை உனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

83. பேதைமை அகற்று.
அறியாமையைப் போக்க வேண்டும்.

84. பையலோடு இணங்கேல்.
அறிவிலிகளான சிறுவர்களுடன் சேரலாகாது.

85. பொருள்தனைப் போற்றி வாழ்.
பொருளைவீண்செலவு செய்யாமல்பாதுகாத்து வாழவேண்டும்.

86. போர்த் தொழில் புரியேல்.
வீணான சண்டை சச்சரவுகள் செய்யாதே.

87. மனம் தடுமாறேல்.
எதுகண்டும் மனம் தடுமாறல் கூடாது.

88. மாற்றானுக்கு இடம் கொடேல்.
பகைவனுக்கு இடம் கொடுக்க கூடாது.

89. மிகைபடச் சொல்லேல்.
அளவுக்கு மீறி எதையும் கூறுதல் ஆகாது.

90. மீதூண் விரும்பேல்.
அதிகமாக உண்ண ஆசைப் படாதே.

91. முனைமுகத்து நில்லேல்.
போர் முனையிலேஆயுதம் இன்றி நில்லாதே.

92. மூர்க்கரோடு இணங்கேல்.
மூர்க்கர்களுடன் சிநேகிதம் கொள்ளாதே.

93. மெல்லி நல்லாள் தோள்சேர்.
மனைவியுடன் இன்பமாக சேர்த்து வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. மேன்மக்கள் சொல் கேள்.

நல்லொழுக்கமுடைய பெரியார்கள் கூறும் புத்திமதிகளைக் கேட்க வேண்டும்.

95. மை விழியார் மனை அகல்.

விலை மாதர் வீட்டுவழி ஒருபோதும் போகாதே.

96. மொழிவது அற மொழி.

சொல்வதை ஐயம் திரிபு அற சொல்ல வேண்டும்.

97. மோகத்தை முனி.

ஆசையை கோபித்து விரட்டி விட வேண்டும்.

98. வல்லமை பேசேல்.

சுய சாமர்த்தியத்தைப் பெரிதாகப் பேசுதலாகாது.

99. வாது முற்கூறேல்.

வீண் வாதங்களுக்கு முற்பட்டு பிறரை அழைத்தலாகாது.

100. வித்தை விரும்பு.

கல்விப் பொருளை விரும்பிக் கற்க வேண்டும்.

101. வீடு பெற நில்.

முத்தி பெறும் வழியிலே ஒழுக வேண்டும்.

102. உத்தமனாய் இரு.

உத்தமனாக வாழ வேண்டும்.

103. ஊருடன் கூடி வாழ்.

ஊருடன் ஒற்றுமையாக இணைந்து வாழ்வாயாக.

104. வெட்டெனப் பேசேல்.

வெடுக்கென்றுபேசுதலாகாது.

105. வேண்டி வினை செயேல்.

வேண்டுமென்றே தீய காரியம் செய்யாதே.

106. வைகறைத் துயில் எழு.

விடியற்காலையில் தூக்கம் கலைந்து எழ வேண்டும்.

107. ஒன்னாரைத் தேறேல்.

பகைவர்களை நம்பாதே

108. ஓரம் சொல்லேல்.

ஒருதலைப்பட்சமாக குறை எதுவும் சொல்லலாகாது.

109. ஔவியம் பேசேல்

பொறாமையோடு மற்றவர்களுடன் பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அன்புடைமை

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 71

அன்புடையாரின் துன்பத்தைக் கண்டதும் அவர் தம் கண்களிலிருந்து நீர் சிந்தி அன்பை வெளிப்படுத்திவிடுவர். எனவே அன்பிற்கு அதை பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாள்பாழ் இல்லை.

2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 72

அன்பில்லாதவர்கள் அனைத்துப் பொருளையும் தாமே பிறர்க்கு தராமல் அனுபவிப்பார்கள். அன்புடையவர்கள் தம் பொருளையும் உடலையும் பிறர்க்கு தந்துதபுவர்.

3. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. 73

அன்புடன் பொருந்தி வாழ்வதே அரிய உயிர்க்கு, உடலுடன் பொருந்திய தொடர்பு ஆகும்.

4. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 74

பிறரிடத்தில் அன்பு செலுத்தி விருப்புடனிருக்கும் தன்மை, நட்பு என்னும் அளவு கடந்த சிறப்பைத் தரும்.

5. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு. 75

இவ்வுலகில் அன்புடனிருந்து இல்வாழ்க்கையில் இன்புற்றவர், மறுபிறவியில் அடையும் பேரின்பம் அவர் அன்புடையவராக ஒழுகிய ஒழுக்கத்தின் பயனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 76

அறம் செய்வதற்கே அன்பு துணையாக உள்ளது என்று அறிவுடையோர் கூறுவர். அன்பு தீய எண்ணங்களையும் தீமைகளையும் ஒழிப்பதற்கும் அதுவே துணையாகும்.

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 77

எலும்பற்ற உயிர்களை வெயில் காய்ந்து வருத்துவது போல், அன்பற்றவரை அறக்கடவுள் வருத்தும்.

8. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 78

மனத்தில் அன்பில்லாதவர் இல்லறத்தில் நன்கு வாழ்தல் என்பது பெரும் பாலைவனத்தில் உலர்ந்த மரம் துளிர்ப்பது போன்றதாகும்.

9. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு. 79

உடம்பின் உள்ளுறுப்பாகிய உள்ளத்தில் அன்பில்லாதவர்க்கு வெளியுறுப்புக்களால் பயன் ஏதுமில்லை.

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. 80

அன்புடன் பொருந்திய உடலின் உயிரே நிலை பெறும். அன்பில்லாதவர் உடல் வெறும் எலும்பும், தோலும் போர்த்திய கூடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இனியவை கூறல்

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 91

இன்சொற்கள் என்பது மாசில்லாத அன்போடு கலந்த மெய்ப் பொருள் கண்டாரின் வாய்ச்சொற்களே ஆகும்.

2. அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின். 92

மனமுவந்து ஒருவருக்கு ஒரு பொருளை கொடுப்பதை விட முகம் மலர்ந்து கூறும் இனிய சொற்கள் சிறந்ததாகும்.

3. முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். 93

அறம் என்பது, முகமலர்ச்சியுடன் ஒருவரை பார்த்து உள்ளத்தில் எழும் அன்பு உணர்ச்சியினால் கூறும் இனிய சொல்லே ஆகும்.

4. துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 94

இன்பந்தரும் இனிய சொற்களையே எவரிடத்தும் பேசுகின்றவர் களுக்குத் துன்பம் தரும் வறுமை வந்து சேராது.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு
அணியல்ல மற்றுப் பிற. 95

பெரியோர்களிடத்து பணிவும், அனைவரிடத்தும் இனிய சொற்கள் பேசுதலுமே ஒருவனுக்கு அணியாகும். இவையன்றி உடம்பில் அணியும் அணிகலன்கள் அணியாகாது.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 96

அறமும், நன்மையும் தரும் இனியசொற்களை ஆராய்ந்து ஒருவன் சொல்வானானால் தீமைகள் ஒழிந்து அறம் பெருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். 97

பிறருக்கு நன்மையைக் கொடுக்கும் இனிய சொல், நேர்மையான வாழ்க்கையையும், நல்வழிப்பயனையும் உண்டாக்கும்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும். 98

பிறருக்கு வேதனைகள் கொடுக்காத இனிய சொல் கூறியவருக்கு இப்பிறவியிலும், இனிவரும் பிறவியிலும் இன்பம் தரும்.

9. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 99

பிறர்கூறும் இனிய சொல்கேட்டு அதன் இன்பத்தை உணர்பவன், பிறரிடம் வன்மையான கடுஞ்சொல்லை கூறுவதேன்?

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 100

உலகில், இன்பந்தரும் இனிய சொல்லிருக்க, வேதனை தரும் கடும் சொல் கூறுவது, தன்னிடம் உள்ள கனியை உண்ணாது இனிமையற்ற காயை உண்பது போன்றதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. அடக்கமுடைமை

1. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 121

அடக்க குணம் ஒருவரை தேவரிடத்தே அழைத்துச் செல்லும். அடங்காமை நரகத்தில் தள்ளிவிடும்.

2. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊங் கில்லை உயிர்க்கு. 122

அடக்கம் என்ற குணத்தை சிறந்த பொருளாக காக்க வேண்டும். அவ்வடக்கத்தை விட சிறந்த செல்வம் உயிர்க்கில்லை.

3. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். 123

அறிய வேண்டியவற்றை அறிந்து அடங்கி நடந்தால், அவ்வடக்கம் பிறரால் போற்றப்பட்டு மதிப்பு தரும்.

4. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. 124

நல்லறத்தில் தவறாது முறையாக அடங்கி வாழ்பவன் பெருமை மலையைவிட பெரிதாகக் கருதப்படும்.

5. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 125

பணிவுடைமை எல்லோர்க்கும் வேண்டும், அது செல்வர்க்கு இருப்பது மற்றொரு சிறப்புடைய செல்வமாகும்.

6. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடங்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. 126



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமை, தன் உறுப்புக்களை ஓட்டினுள் அடக்கி வாழ்தல் போல், ஐம்புலன்களையும் அடக்கி வாழ்வது ஏழு பிறப்பிலும் தீமையின்றி காக்கும்.

7. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பார் சொல்லிழுக்குப் பட்டு. 127

எவற்றை அடக்காவிட்டாலும் நாவை அடக்க வேண்டும். இல்லையேல் தவறான சொற்களை கூறி அவமானப்பட நேரிடும்.

8. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகாதுஆகி விடும். 128

தீய சொற்களினால் விளையும் தீமையானது, ஒருவனிடமிருக்கும் அனைத்து நலன்களையும் கெடுதலாக்கி விடும்.

9. தீயினாற் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 129

தீச்சுட்ட புண்ணினால் உடலில் ஏற்படும் வடு மனதில் ஆறும். ஆனால் தீயசொற்களினால் ஏற்படும் புண் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

10. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. 130

மனதில் சினம் ஏற்படாமல் காத்து அடக்கத்துடனிருப்பவனிடம் அறக்கடவுள் சென்றடையும் சமயத்தை எதிர் நோக்கியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. ஒழுக்கமுடைமை

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 131

ஒழுக்கமானது பெரும் சிறப்பை அளிப்பதால், அது உயிரைவிடச் சிறந்ததாக காக்கப்பட வேண்டும்.

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அ∴தே துணை. 132

துன்பத்திலும் ஒழுக்கம் காக்கப்பட வேண்டும். ஏனெனில் எவ்வளவு ஆராய்ந்து நோக்கினாலும் ஒழுக்கமே சிறந்த துணையாக நிற்கின்றது.

3. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 133

ஒழுக்கமுடைமை குடிச்சிறப்பாகும். ஒழுக்கத்தில் தவறினால் அது தாழ்ந்த குலத்தவனாய் ஆக்கிவிடும்.

4. மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். 134

கற்பவன் கற்றதை மறந்தாலும், அவற்றைப் பின்னர் கற்றுக் கொள்ள முடியும். ஒழுக்கத்தில் குறைவடைந்தால் அவனது குடியின் சிறப்பு அழிந்துவிடும்.

5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. 135

பொறாமை உள்ளவனிடம் செல்வம் நில்லாது நீங்கிவிடும். அவ்வாறே ஒழுக்கமற்றவனிடம் உயர்வு நீங்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 136

அறிவுடையோர், சிறிதும் ஒழுக்கம் தவறாமல், செய்யும் கடமை எவ்வளவு கடினமாக இருப்பினும் செவ்வனே செய்து முடிப்பர். தவறினால் துன்பம் வரும் என அறிந்து.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 137

ஒழுக்கமுடையவர் மேன்மை அடைவார்கள். அதில் தவறுபவர் அடையக்கூடாத பெரும் பழி அடைவர்.

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 138

நல்லொழுக்கம் என்றும் நல்லின்பம் தரும். தீய ஒழுக்கம் எப்பிறவியிலும் துன்பத்தைக் கொடுக்கும்.

9. ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 139

ஒழுக்கமுடையவர் தீய வார்த்தைகளை தவறியும் தம் வாயால் கூறுதல் இயலாது.

10. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 140

உலகத்தோர் கருத்துக்கு ஒப்ப வாழும் முறையறியாதவர்கள், கல்வி பலகற்றும் அறிவற்றோர் எனப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பொறையுடைமை

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை. 151

நிலம், தன்னைத் தோண்டுவாரையும் சுமந்து நிற்கும். அதுபோல தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளுதல் சிறப்பு.

2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. 152

ஒருவன் செய்யும் தீமையை பொறுத்துக் கொள்ள வேண்டும். அதனை மறந்து விடுதல் அதனினும் பெரும் சிறப்பு.

3. இன்மையுள் இன்மை விருந்துஒரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153

வறுமையிலும் வறுமை விருந்தினரை உபசரிக்காதிருத்தல். வீரத்திலும் வீரம் என்பது பிறர் செய்யும் தவறினைப் பொறுப்பது.

4. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப்படும். 154

ஒருவன் பொறுமையைப் பாதுகாத்து நடக்க விரும்பினால் அவன் நற்குணங்களில் நீங்காதிருக்க வேண்டும்.

5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பார்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 155

பிறர் செய்த தீமையை பொறுக்காமல் தண்டிப்பவரை எவரும் மதியார். பொறுத்தவரை பொன்போன்று மதிப்பர்.

6. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்தாரை தண்டித்தவர்க்கு அத்தருணம் மகிழ்ச்சியே; ஆனால் பொறுத்தார்க்கு உலகம் உள்ளவரை புகழ் உண்டு.

7. திறனல்ல தற்பியர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று. 157

பிறர் முறையற்ற தீமை செய்தாலும், அவருக்கு அறமற்ற துன்பத்தைச் செய்யாதிருத்தல் சிறந்தது.

8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம் தம்
தகுதியான் வென்று விடல். 158

ஆணவத்தினால் தீமை செய்தவர்க்கும் நன்மை செய்து பெருந்தன்மையால் வென்றுவிடல் வேண்டும்.

9. துறந்தாரின் தூய்மைஉடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோக்கிற் பவர். 159

தீயவர் சொல்லும் கொடும் சொற்களைப் பொறுப்பவர் துறவிகளைவிட தூயவராவார்.

10. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின். 160

பிறர் சொல்லும் தீயச் சொற்களைப் பொறப்பவர். உண்ணாமல் தவம் செய்யும் துறவியை காட்டிலும் உயர்ந்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. அருளுடைமை

1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 241

உயிர்களிடம் அருள் கொண்டு வாழ்வதே சிறந்த செல்வமாகும். பொருளால் வரும் செல்வம் அருளில்லாவிடில் இழிவாகக் கருதப்படும்.

2. நல்ஆற்றான் நாடி அருளாள்க பல்ஆற்றால்
தேரினும் அஃதே துணை. 242

நல்வழியை ஆராய்ந்து அருள் செய்ய வேண்டும். ஏனெனில், பலவழிகளில் அருளே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

3. அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். 243

உயிர்களிடம் கருணை கொண்டு அருள் செய்பவர் இருள் சேர்ந்த நரகத்திற்கு செல்லமாட்டார்.

4. மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. 244

உயிர்களிடம் கருணை கொண்டு அன்பு செலுத்துபவர், தன் உயிர் அஞ்சுமளவிற்கு பாவச் செயல்களை செய்யார்.

5. அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. 245

அருள் உடையவர்களுக்கு என்றும் துன்பம் இல்லை. காற்று உலவுகின்ற வளமுடைய இவ்வுலகில் வாழ்வாரே இதற்கு சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். 246

அருளற்றவராய் கொடுமைகளைச் செய்பவர், பொருளற்றவராய், வாழ்வும் இழந்தவராகக் காணப்படுவர்.

7. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. 247

பொருளில்லாதவருக்கு இவ்வுலக வாழ்வில் இன்பம் இல்லாதது போல், உயிர்களிடத்தில் அன்பில்லாதவருக்கு வானுலகமில்லை என்றாகும்.

8. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற்றுஆதல் அரிது. 248

பொருளில்லாதவர் ஒரு நாள் பொருளுடையவர் ஆவார். ஆனால் அருளில்லாதவர் ஒரு நாளும் சிறந்து விளங்கமாட்டார்.

9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். 249

அருளற்றவன் செய்யும் அறம் என்பது அறிவற்றவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டது போலாகும்.

10. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 250

தன்னைவிட எளியவனை தான் வருத்த முற்படும் பொழுது, தன்னைவிட வலியவர் முன் தான் அஞ்சும் நிலையை எண்ணிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. வாய்மை

1. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 291

வாய்மை எனப் போற்றப்படுவது எவரும், எந்த உயிர்க்கும் சிறிதும் தீங்கில்லாத சொற்களைக் கூறுதல்.

2. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்த்த
நன்மை பயக்கும் எனின். 292

பொய் கூறுவதால் தூய நன்மை உண்டாகுமானால், அப் பொய்யும், மெய்யெனக் கொள்வது நன்மை.

3. தன்னெஞ்சுஅறிவது பொய்யற்க பொய்த்பின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 293

ஒருவன் பொய்யென்று அறிந்த ஒன்றை மறைப்பானாயின் அவன் நெஞ்சே அவனை வருத்தும்.

4. உள்ளத்தால் பொய்யாதுஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள்எல்லாம் உளன். 294

மனத்தில் பொய்யை நினைக்காமல் நடப்பவன், உலக்கத்தார் மனதில் எல்லாம் நிலைத்திருப்பான்.

5. மனத்தோடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. 295

அறமும், தவமும் செய்வதைக் காட்டிலும் உள்ளமறிந்து உண்மை பேசுதல் உயர்ந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும். 296

பொய் பேசாதிருப்பது போன்ற புகழ் வேறில்லை. அது அவன் வருந்தாமல் இருக்க எல்லா நன்மைகளையும் தரும்.

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 297

பொய் பேசாமை என்னும் நல்வழியை என்றும் கடைப்பிடிப் பவனுக்கு, அதைவிட அறம் செய்வதற்கு வேறில்லை.

8. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையான் காணப் படும். 298

உடல் தூய்மை நீராடுவதால் ஏற்படும். ஆனால் உள்ளத் தூய்மை உண்மை பேசுவதால் அமையும்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 299

புற இருளை போக்கும் விளக்குகளெல்லாம் விளக்கல்ல. மன இருளான பொய்யை விலக்குவதே விளக்கு எனப்படும்.

10. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. 300

யாம் உண்மை என்று அறிந்தவற்றுள் உண்மையைக் காட்டிலும் சிறந்தது வேறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. இன்னா செய்யாமை

1. சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள். 311

*சிறப்புடைய பெரும் செல்வம் கிடைப்பதாயினும் பிறர்க்கு தீமை செய்யாமை தூயவர் கொள்கை ஆகும்.*

2. கறுத்துஇன்னா செய்தஅக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள். 312

*ஒருவன் தன்மீது பகைக் கொண்டு துன்பம் செய்தாலும், அவனுக்கு தீங்கு செய்யாமை நல்லோர் கொள்கை ஆகும்.*

3. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும். 313

*தான் துன்பம் ஏதும் செய்யாதிருக்க தனக்கு, தீங்கு செய்தவர்க்கு துன்பம் செய்யின், தன்னை நீங்கா துன்பம் வந்து சேரும்.*

4. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 314

*தீங்கு செய்தவரை தண்டிப்பது என்பது, அவர் வெட்கி தலை குனியும்படியாக அவருக்கு நன்மைகளைச் செய்தல் ஆகும்.*

5. அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை. 315

*பிறர் துன்பம், தன் துன்பம் போல் கருதி உதவாதவரிடத்தில் அறிவிருந்து பயன் என்ன?*

6. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 316



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியது என தான் அறிந்தவற்றை பிறர்க்குத்தான் செய்யாதிருக்க வேண்டும்.

7. என்னைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்
மாணாசெய் யாமை தலை. 317

என்றென்றும், எவர்க்கும், எவ்வகையிலும், மனதளவிலும் துன்பம் செய்யாமை சிறப்பு.

8. தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்உயிர்க்கு இன்னா செயல். 318

ஒருவன் செய்யும் தீமை தன்னுயிர்க்கு துன்பம் தருவதையுணர்ந்தும், பிறர்க்கு அத்தீமை செய்வதேன்?

9. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 319

ஒருவனுக்கு காலையில் துன்பம் செய்தால், தனக்கு துன்பம் மாலையில் பிறர் செய்யாமல் தானே வந்து சேரும்.

10. நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 320

துன்பங்கள் அனைத்தும் துன்பம் செய்தவர்க்கே வந்து சேரும். துன்பம் வேண்டாதவர் பிறர்க்கு தீமை செய்யார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக. 391

*கற்க வேண்டிய நூல்களை தெளிவாகக் கற்று, அந்நூல் நெறிப்படி வாழ வேண்டும்.*

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 392

*எண்ணும் எழுத்துமாகிய இரண்டும் வாழும் மக்களுக்கு கண் போன்றவை.*

3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர். 393

*கற்றவரே கண்ணுடையவர், கல்லாதவர் முகத்தில் உள்ள கண்கள் புண் போன்றவை.*

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 394

*மகிழுமாறு பழகி, நினைத்திருக்கும் படியாக பிரிவர்; இதுவே கற்றவர் இயல்பு.*

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். 395

*செல்வந்தர் முன் இரந்து நிற்கும் ஏழை போல், கற்றவர் முன் பணிந்து நின்று கற்றவரே மேலானவர், கல்லாதவர் சிறியோர்.*

6. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 396



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணற்கேணி தோண்டத்தோண்ட நீர் தருவது போல் நூல்களைக் கற்கக் கற்க அறிவு பெருகும்.

7. யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையுங் கல்லா வாறு. 397

கற்றவருக்கு எந்தநாடும், எந்த ஊரும் தன்னுடையது போன்றிருக்க சிலர் இறக்கும் வரை கல்லாதிருப்பது ஏன்?

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. 398

ஓர் பிறவியில் கற்ற கல்வி ஏழுபிறவியிலும் வந்து உதவும்.

9. தாம் இன்புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 399

தனக்கு இன்பந்தரும் கல்வியை பிறருக்கு கூறி அவர் இன்புறுவதைக் கண்டு, மேலும் கல்விதனை விரும்புவர் கல்வி கற்றோர்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை 400

ஒருவனுக்கு அழியாத சிறந்த செல்வம் கல்வியே பிற செல்வம், செல்வமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. கல்லாமை

1. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 401

அறிவுச் சிறப்பிற்கு ஏதுவான நூல்களை கல்லாது அவையேறுதல், விளையாடும் இடமின்றி காய் உருட்டுவது போலாகும்.

2. கல்லாதவன் சொல்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 402

படிப்பறிவு இல்லாதவன் பேச விரும்புதல், முலையிரண்டும் இல்லாதவள் புணர்தலை விரும்புவது போலும்.

3. கல்லாதவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின் 403

கற்றவர்முன் பேசாது இருப்பாரேயானால் கல்லாதவரும் மிக நல்லவரே

4. கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். 404

கல்லாதவனின் இயற்கையறிவு கூர்மையுடைய தாயினும் அறிஞர் பயன்படுத்தமாட்டார்.

5. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 405

கற்றவருடன் கூடி உரையாடும்போது கல்லாதவனின் மதிப்பு குறைந்து போகும்.

6. உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். 406

உயிரோடு வாழ்ந்தாலும் கல்வியறிவு இல்லாத மூடர் உவர் நிலம் போன்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. 407

*நுண்மை, மாண்பு, கூர்மையறிவு இல்லாதவன் மண்ணால் புனையப்பட்ட அழகான பொம்மை போன்றவன்.*

8. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார் கண்பட்ட திரு. 408

*கற்றவர் அடைந்த வறுமையை விட கல்லாதவர் அடைந்த செல்வம் கோடானது.*

9. மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு. 409

*படிக்காதவர் உயர்குடியில் பிறந்திருந்தாலும் தாழ்ந்த குடியில் பிறந்த படித்தவருக்கு ஈடாகமாட்டார்.*

10. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர். 410

*படித்தவருக்கும் படிக்காதவருக்கும் உள்ள வேற்றுமை எவ்வளவு எனில் விலங்குக்கும் மனிதருக்கும் உள்ள வேற்றுமையே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. மானம்.

1. இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருவ விடல். 961

இன்றியமையாச் சிறப்பைத் தருவதாயினும் குடிப் பெருமைக்கு குறைவானவற்றை செய்தலாகாது.

2. சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 962

புகழோடு மானமும் வேண்டுபவர், புகழில்லா இழிவான செயல் செய்யார்.

3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 963

செல்வம் பெருகும் போது அடக்கம் வேண்டும். செல்வம் குறையும்போது இழிவற்ற பெருமிதம் வேண்டும்.

4. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்த கடை. 964

நற்குடிமக்கள், உயர்ந்த பண்பிலிருந்து இறங்கிய விடத்து தலையிலிருந்து உதிர்ந்த மயிரினைப் போன்று பெருமையுடையவரும் தாழ்வர்.

5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 965

ஒரு குண்டுமணியளவு இழிவான செயலை செய்தாலும், மலை போன்ற பெருமையுடையவரும் தாழ்வர்.

6. புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை. 966



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவமதிப்பார் பின், மானம் விட்டு நிற்பதால் என்ன பயன்? புகழும் வராது; மறுமையில் விண்ணுலகும் கிட்டாது.*

7. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 967

*பகைவர் பின் சென்று வாழ்வதை விட மானத்துடன் தன்னிலையி லிருந்து இறப்பது மேல்.*

8. மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து. 968

*உயர் நலங்கெட்டு மானமிழந்த நிலையில், உடலை வளர்த்தல் உயிருக்கு மருந்தாகுமா?*

9. மயிர்நீப்பின் வாழாக்கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் 969

*மயிர் நீங்கின் உயிரை விடும் கவரிமான் போன்றவர்கள், மானம் போவதாயின் உயிரைவிடுவர்.*

10. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. 970

*மானக்கேடு வந்தபோது உயிரிழக்கும் மாண்புடையவரின் புகழ் விளக்கை உலகம் தொழுது போற்றும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. சான்றாண்மை

1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கது. 981

*தம் கடமைகள் அறிந்து, குண நிறைவு கொண்டவர்க்கு நல்ல முயற்சிகள் எல்லாம் கடமைகள் என்பர்.*

2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று. 982

*சான்றோர்களின் சிறப்பு குணநலமே; மற்ற சிறப்புக்கள் எவ்வகைச் சிறப்பிலும் அடங்கா.*

3. அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். 983

*அன்புடைமை, நாணம், பொதுநலம், இரக்கம், வாய்மை, ஐந்தும் குண நிறைவு என்ற கட்டடத்தின் தூண்களாகும்.*

4. கொல்லா நலத்து நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 984

*தவம் என்பது எவ்வுயிரையும் கொல்லாமை; பிறர் குறையை கூறாமை சான்றாண்மை எனப்படும்.*

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 985

*காரியம் முடிப்போரது திறமை பணிந்துபோதல்; அதுவே பகைவரை நண்பராக்குங் கருவி.*

6. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். 986

*தோல்வியைத் தாழ்ந்தவரிடத்திலும் ஒத்துக்கொள்வது நிறை குணத்தின் உரைக்கல் எனப்படும்.*

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தீமை செய்தவர்க்கும் நன்மை செய்யாவிடின் நிறை குணத்தின் பயன் என்ன?*

8. இன்மை ஒருவருக்கு இளிவன்று சால்பென்னும்
திண்மைஉண்டாகப் பெறின் 988

*நிறைகுணம் ஒருவனுக்கு உறுதியாகுமானால் வறுமை அவர்க்கு இழிவாகாது.*

9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். 989

*சால்பாகிய கடலுக்கு கரையானவர், உலக அழிவு காலம் உண்டானாலும் ஒழுக்கம் தவறார்.*

10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 989

*நிறைகுணம் உடையவர் தம்முடைய தன்மையில் குறைவாராயின், பூமி அவர் பாரத்தைத் தாங்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. பண்புடைமை.

1. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 991

*எவரிடத்தும் எளிதாக நட்புக்கொண்டு இனிதாக கலந்துரையாடுதல் பண்புடைமை என்ற நடத்தையைத் தரும்.*

2. அன்புடைமை ஆன்று குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 992

*யாரிடத்தும் அன்புடனிருத்தல், பிறந்த உயர்குடிக்கேற்ப வாழ்தல் ஆகிய இரண்டும் பண்பான நெறிகளாம்.*

3. உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. 993

*மனிதர்கள் ஒத்திருப்பது என்பது உறுப்பால் ஒத்திருப்பது அன்று, இனிது பேசும் பண்பினால் ஒத்திருப்பதேயாகும்.*

4. நயனோடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. 994

*நீதியுடன் நன்மையை உலகத்திற்கும், தனக்கும் கருது வாருடைய குணத்தை உலகம் போற்றும்.*

5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 995

*விளையாட்டிற்குங்கூட ஒருவரை இகழ்தல் கூடாது. பகைவரிடத்தும் பாராட்டும் குணமே பண்பாளரிடம் காணப்படும்.*

6. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன். 996

*உலகம் பண்புடையாரின் ஒழுக்கத்தால் வாழ்கின்றது. அஃதில்லாவிடின் அழிந்து போயிருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர். 997

அரம் போன்ற கூரிய அறிவுடையவராக இருந்தாலும், மனிதத் தன்மை இல்லாதவர் மரத்திற்கு ஒப்பாவார்.

8. நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பற்றா ராதல் கடை. 998

நட்புக்கொள்ளாமல் தீமை செய்வாரிடத்தும், பண்புடன் பழகாமை இழிவாகும்.

9. நகல்வல்லர் இல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள். 999

எவருடனும், சிரித்துப் பழகத் தெரியாதவர்க்கு இவ்வுலகம் பகலிலும் இருளாக விளங்கும்.

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 1000

தீயவன், பெற்ற பெரும் செல்வம், பால் அது வைக்கப்பட்ட பாத்திரத்தின் தன்மையால் கெடுதல் போலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
3. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
4. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
5. ஆழம் அறியாமல் காலை விடாதே.
6. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
7. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
8. துணைப்போனாலும் பிணைப்போகாதே.
9. பல துளி பெரு வெள்ளம்.
10. பதறாத காரியம் சிதறாது.
11. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
12. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
13. எறும்பூரக் கல்லும் குழியும்.
14. அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
15. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
16. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
17. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
18. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
19. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
20. ஊரோடு ஒத்து வாழ்.
21. ஊர் ஓடின் ஒத்து ஓடு ஒருவன் ஓடின் பார்த்து ஓடு.
22. கண்கெட்ட பிறகு சூரிய வணக்கம் ஏன்?
23. கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்.
24. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.
25. பகலில் பார்த்துப் பேசு இரவில் அதுவும் பேசாதே.
26. புத்திமான் பலவான்.
27. பேராசை பெருநட்டம்.
28. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே.
29. மனமுண்டானால் இடம் உண்டு.
30. மின்னுவதெல்லாம் பொன் அல்ல.
31. வெள்ளம் வருமுன்னே அணை போடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவும்- விழாக்களும்

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | - | காகித விழா |
| இரண்டு வருடம் | - | பருத்தி விழா |
| மூன்று வருடம் | - | தோல் விழா |
| நான்கு வருடம் | - | பூ விழா |
| ஐந்து வருடம் | - | மர விழா |
| ஆறு வருடம் | - | கற்கண்டு விழா |
| ஏழு வருடம் | - | செம்பு விழா |
| எட்டு வருடம் | - | வெண்கல விழா |
| ஒன்பது வருடம் | - | மணிக்கலச விழா |
| பத்து வருடம் | - | தகர விழா |
| பதினைந்து வருடம் | - | படிக விழா |
| இருபத்தைந்து வருடம் | - | வெள்ளி விழா |
| முப்பது வருடம் | - | முத்து விழா |
| நாற்பது வருடம் | - | மாணிக்க விழா |
| ஐம்பது வருடம் | - | பொன் விழா |
| அறுபது வருடம் | - | மணி விழா, வைர விழா |
| எழுபத்தைந்து வருடம் | - | பவள விழா |
| எண்பது வருடம் | - | அமுத விழா |
| நூறு வருடம் | - | நூற்றாண்டு விழா |
| ஆயிரம் வருடம் | - | மிலேனிய விழா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BLISSFUL DAY

Peace is so hard to find
Because it is under your nose

The only way to gain respect
Is firstly to give it

It does not cost A cent
So speak love ful, true, sweet words

The less you speak the more
You are listened to

Jealovsy cannot exist
if I know my real quality Is to love

Love is universal
It has no limits

Sometimes A smile can be
Like a drop of water in a desert

When you get angry you
Lose more then your temper

Anger makes you mad
why not be sensible

A smile can make short work
of any differently

Those who remain very happy
will never have internal laziness.
Laziness is a great vice.

Life is Like A drama. If I
Understand the plot there is great happiness.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To have balance in all
situations is the key to happiness.

Sometimes smile
Can be A drop of water in a destroyed

Physical beauty can be
lost with marks of age or through accident.
Spiritual beauty cannot be destroyed

To forget your troubles
Remember god

Condition your mind and
Remain cool under all conditions.

when the world becomes like
A wild strome the most
Beautiful shelter is god

Calmness and tolerance act like air-conditiong in a room.
They increase man's efficiency.

The wporried convict dies
many times before he reaches the galloow

If man cannot find peace within himself;
Can there be pease in this world

Silence is not only the absence of sound but also
Stillness of the mind

If every morning you can spend a few moments to
sort out your thoughts and remember god, your day will
be filled with magic

A rose can live amongst the
thorns and yet never be
Injured by them; How about you?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன வரும்? என்னோடு!

என்னோடு என்ன வரும்? இந்த உடல் வருமா? என் உடல் சார்ந்த உறவு வருமா? நான் படித்த படிப்பு வருமா? பெற்ற பட்டம், பதவி வருமா? நான் சேமித்துச் சேர்த்த பொருள் வருமா? அனுபவிக்கும் அதிகாரம்தான் கூட வருமா? உண்ணாமலும், உறங்காமலும் கூட உழைத்து உழைத்து ஓடாகிப் போகிறோமே! கூட வரப் போவதற்காகவும் கொஞ்சம் உழைத்தாலென்ன? இதைப் பற்றிய சிந்தனை, செயல் வடிவம் பெற்றிருந்தால் நல்லது தான். செய்யவில்லையா, பரவாயில்லை. இப்போதும் கூட செய்யமுடியும். ஆம்; இப்போதும் செய்யலாம்; செய்ய வேண்டும். ஆனால் செய்வதை உடனே செய்தாக வேண்டும். என்ன நினைக்கிறீர்கள்.


மனிதன் வாழும், காலத்தில் மனம், சொல், செயலில் களங்கமின்றி கடமையைச் செய்திருந்தால், தனக்கும் மன நிறைவு இருக்கும். மற்றவர்களின் அன்புக்கும் பாத்திரமாகியிருப்போம். எல்லோரிடமும், அன்போடும், அடக்கத்தோடும் நடந்து கொண்டிருந்தால், அனைவரின் ஆசிகளும் கிடைத்திருக்கும். உண்மையில் நாம் செய்த கர்மமும் சுபாவமும் அணுகுமுறையும் தனக்கும், பிறருக்கும் திருப்தியளிக்கக் கூடியதாக இருந்திருந்தால், இதன் காரணமாக நாம் பெறுகின்ற ஆசிகள்கூட வரும். இவ்வாறு எல்லோரிடமிருந்தும் பெறும் ஆசிகளே உண்மையான பொக்கிஷம். மற்றவர் உள்ளத்தில் நமக்காக உண்டாகும் சுபபாவனைகளே உண்மையிலும் உண்மையான பட்டம் (டிகிரி). உடல் கூட வராது. உடல் மூலமாகச் செய்த நல்ல கர்மத்தின் மூலம் பதிவாகியிருக்கின்ற நல்ல சமஸ்காரங்கள் கூட வரும். பொருள் கூட வராது. ஆனால் பொருள் மூலமாக ஆன்மீக முன்னேற்றத்திற்காக, உலகநன்மையின் பொருட்டு பொது நலத் தொண்டு செய்திருந்தால், அது கூட வரும். பட்டம், பதவி, மானம், மரியாதை, பொருள் நாற்காலி எதுவும் கூட வராது. ஆனால் இவற்றின் மூலமாக மக்களுக்கு நல்லது செய்திருந்தால்.அதன் காரணமாக அவர்களிடம் உண்டாகும் மனப்பூர்வமான ஆசிகள் தாம் பட்டங்களாக கூட வரும் மற்ற எதுவும் வராது.

**பிரஜா பிதா பிரம்மகுமாரிகள்,**

சாந்திதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

***"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"***

**எங்கள் குடும்ப ஒளிவிளக்கு**

## அமரர் இரத்தினம் கிருஷ்ணகாந்தா

அவர்கள் 29.01.2014 இல் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து எம் துக்கத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் தொலைபேசி மூலம் எமது துயரில் கலந்து கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பித்தோர்க்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியோர்க்கும் இம்மலரினை உரிய நேரத்தில் அச்சிட்டு உதவிய குரு அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றி நவிலல்களை தெரிவித்துக் கொள்கின் றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்


Guru Printers, 39/2, Adiyapatham Road, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இரத்தினம் கிருஷ்ணகாந்தா

# வம்சவிருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான்
ஸ்ரீ கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org